செய்தி வெளியீடு எண்:691 நாள் : 21.12.2013

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் 19.12.2013 அன்று மேற்கொண்ட ஆய்வு கூட்டம் குறித்த பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி சுற்றுச்சூழல் துறையின் புதிய அமைச்சராக மாண்புமிகு திரு. தோப்பு என்.டி.வெங்கடாச்சலம் அவர்கள் பொறுப்பேற்று முதல் ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் கூடுதல் தலைமை செயலர், வாரியத்தின் தலைவர், வாரியத்தின் உறுப்பினர் செயலர், இயக்குநர் சுற்றுச்சூழல் துறை, வாரியத்தின் உயர் அதிகாரிகள், மண்டல மற்றும் மாவட்ட அளவிலான அதிகாரிகள் கலந்து கொண்டனர். தலைவர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவர்கள் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களை வரவேற்று அதிகாரிகளை அறிமுகப்படுத்தினார்கள்.

பிறகு வாரியம் மேற்கொண்டு வரும் அனைத்து பணிகள் மற்றும் நடைமுறைப்படுத்தி வரும் சட்டங்களை வாரிய தலைவர்அவர்கள் விளக்கமாக தெரிவித்தார்கள். வாரியம் சென்னையில் தலைமை அலுவலகம், 5 மண்டல அலுவலகங்கள், 34 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2 பறக்கும் படை உள்ளன. மொத்தம் 777 பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். தொழிற்சாலைகளை கண்கணிக்கும் பொருட்டு 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள், 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் உள்ளன. வாரியம் இதுவரை 42498 தொழிற்சாலைகளை கண்டறிந்துள்ளது. தொழிற்சாலை மாசு கண்காணிப்பு, தொடர் காற்று கண்காணிப்பு மையம், உதவிமையம் என்ற அமைப்புகளை கொண்டுள்ளது. தீங்கு விளைவிக்கும் கழிவுபொருட்கள் மேலாண்மை, மருத்துவ கழிவு மேலாண்மை, நகர திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, காற்று மற்றும் நீரின் தன்மையை கண்காணிக்கும் திட்டங்கள் போன்ற பல திட்டங்களை வாரியம் நடைமுறைப்படுத்தி வருகின்றது என வாரிய தலைவர் விளக்கமாக தெரிவித்தார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வின் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படியும், வழிகாட்டுதல்கள் படியும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் முனைப்பாக பணிபுரிந்து சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இந்தியாவிலேயே முன்னோடி மாசு கட்டுப்பாடு வாரியமாக திகழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார்கள். திருப்பூர் சாய ஆலைகள் பிரச்சனை பெரிய பிரச்சனையாக கருதப்பட்ட நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்

ஆட்சி பொறுப்பேற்ற ஆறு மாதங்களுக்குள் தீர்வினை எடுத்துள்ளார்கள். கழிவுநீர் சுத்திகரிப்பு முறையில் பூஜ்ஜிய நிலை வெளியேற்றம் (Zero Liquid Discharge) அமைப்பினை அனைத்து சாய ஆலைகள் மற்றும் தோல் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ள மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

இந்தியாவிலேயே முதன்முறையாக தொடர் காற்று கண்காணிப்பு மையத்தினை வாரியம் அமைத்து தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் வாயுக்களின் தன்மையினை கண்காணித்து வருகிறது. தற்பொழுது இந்த மையத்துடன் 191 தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஏனைய மற்ற பெரிய தொழிற்சாலைகளும் இணைக்க அதிகாரிகள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள். இதோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2013–2014 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் போது மேற்கொள்ளப்பட்ட அறிவிப்புகளை நடைமுறைபடுத்துவதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் அனைத்தும் கழிவுநீரினை சுத்திகரித்து அதனை தொழிற்சாலைகளின் பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தவும், மரம் வளர்க்க பயன்படுத்தவும் அனைத்து பொறியாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். இந்நடவடிக்கையால் தொழிற்சாலைகளுக்கு தேவைப்படும் நல்ல நீரின் பயன்பாடு பெருமளவு குறையும் என்பதில் சந்தேகமில்லை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கான பசுமை விருதுகள் வழங்கும் நடைமுறை தற்பொழுது விரிவுபடுத்தப்பட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கிய பெரிய தொழிற்சாலைகளுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 11.9.2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. 2011 – 12 ஆம் ஆண்டின் சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி வாரியத்தில் உள்ள அனைத்து பணியிடங்களும் நிரப்பப்படும் என தெரிவித்ததை தொடர்ந்து வாரியம் கடந்த இரண்டு ஆண்டுகளில் பொறியாளர்கள், சுற்றுச்சூழல் விஞ்ஞானிகள் மற்றும் இதர பணியிடங்களை நிரப்பி வருகின்றது. மீதமுள்ள காலி பணியிடங்களை விரைந்து நிரப்ப வாரியம் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தனது செயல்பாடுகளை கணினி மயமாக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றது. இந்தியாவிலேயே முன் மாதிரி மாநில மாசு கட்டுப்பாடு வாரியமாக திகழ, வாரியத்தின் அனைத்து செயல்பாடுகளையும் கணினி மயமாக்கும்

பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் என மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆசியுடன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், பொது மக்களுக்கும், விவசாயத்திற்கும் பாதிப்பின்றி தொழிற்சாலைகள் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், மேலும் அரசின் கொள்கைகளை தமிழகத்தில் அதிகளவு முதுகலைப் பட்டம் பெற்ற பொறியாளர்கள் பணியாற்றும் இந்த வாரியம் சீரிய முறையில் விரைவாகவும், சிரத்தையோடும் வாரியத்தின் அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் செவ்வனே செய்து முடித்து தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகள் அனைத்து உரிய இசைவாணையோடும் முறையான சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவி சுற்றுச்சூழல் பாதிப்பில்லாத தமிழகத்தை உருவாக்கிடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இறுதியாக வாரியத்தின் கூடுதல் தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் நன்றியுரை தெரிவித்தார்கள்.

**தலைவர்,**

**தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்**

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9